27—

காட்பாடி—சித்தூரிலிருந்து ஆற்காட்டிற்குப் பேருந்து இயக்குதல்.

35866–திருமதி கே.எம். கலைச்செல்வி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடி-சித்தூரிலிருந்து அம்முண்டி, திருவலம் வழியாக ஆற்காட்டிற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இப்பகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களும் பேருந்து வசதி பெற்றுள்ளன. அம்முண்டி, திருவலம் வழி சுற்று வழித்தடமாகும். எனவே இத்தடத்தில் புதிய பேருந்து இயக்க இயலாது.

30—

மணலூர்ப்பேட்டையில் விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

36642–திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணலூர்ப்பேட்டையில் விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994 நவம்பர் 7]

மணலூர்ப்பேட்டையில் விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டத் தீர்மானித்து, மணலூர்ப்பேட்டை அகஸ்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தினை வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32—

நெல்லிக்குப்பம் தொகுதியில் தொழில் வளாகம் அமைத்தல்.

***34245–திரு. எம்.சி. தாமோதரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் மேல்கவரப்பட்டு அருகே தொழில் வளாகம் அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

35—

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தற்காலிக கல்விசாராப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல்.

***9129–திரு. சோ. இராசாராமன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் தற்காலிக கல்விசாராப் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களின் பணியை நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா ?